ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ் ( தனிச்சுற்று )

# கிராங்கிசு

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்



செப்டம்பர் 2018

நன்கொடை - ரூ.10/-

Scanned with OKEN Scanner

வாழ்க வையகம்!

வாழ்க வளமுடன்!!

புதிய பொலிவுடன்...

உங்கள் கூறைநாடு



பாபு

சில்க்ஸ் & ரெடிமேட்ஸ்




Ac மற்றும் *Lift* வசதியுடன்...

தரை தளம் : சேலை பிரிவு

முதல் தளம் : மகளிர், சிறுமியர் ரெடிமேட்

இரண்டாம் தளம் : ஆடவர், சிறுவர் ரெடிமேட்

வாருங்கள்! வாழ்த்துங்கள் !!



04 – அலைபாயுதே


19 – என் அப்பா

26 – அ முதல் ஃ வரை

30 – வெற்றிக்கு வழி

80 – வாய்ப்புகளை உருவாக்கு

# உள்ளே...



இளந்தூது
தூது-30 செய்தி-1

# தலையங்கம்

குற்றம் குற்றம் என அடுத்தவர்களை கைக்காட்டும் நம்மில் எத்தனை பேர் நியாயவிலைக்கடையில் குறைந்த விலைக்கு சட்டத்திற்கு புறம்பாக சர்க்கரை வாங்கியதில்லை.

எத்தகை பேர் தன் வேலை காலவிரயமாவதை தடுக்க கையூட்டு கொடுத்ததில்லை.

எத்தனை பேர் போக்குவரத்து காவலாளி இல்லாத இடத்தில் சிவப்பு சைகையை கடந்து சென்றதில்லை.

எத்தனை பேர் சாதி மத பேதங்களை பொருட்படுத்துவதில்லை.

எத்தனை பேர் சொத்து விவரத்தை மறைத்து குறைவான வரியை செலுத்தியதில்லை.

பதில்?

சிந்தியுங்கள்

நல்ல தலைமையை நம்மில் இருந்து தான் உருவாகுகிறது. எனவே, செயல்களை மாற்றுவோம். மாற்றத்தை போற்றுவோம்.

ஆசிரியர்





# அன்பார்ந்த வாசகர்களே....

எங்களின் இனிய வணக்கங்கள்


29-ஆண்டுகளாய் பத்திரிக்கை உலகில் தனக்கென தனி இடம் பிடித்து வரும் இளந்தூதுவின் 30-ஆம் ஆண்டு செப்டம்பர் இதழின் மூலம் தங்களின் வாசிப்பை நேசிக்க வந்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இத்தருணத்தில் அ.வ.அ கல்லூரியின் இரு தூண்களாக செயலர் திரு. கார்த்திகேயன் ஐயா அவர்களுக்கும் முதல்வர் திரு. நாகராஜன் ஐயா அவர்களுக்கு நன்றியினை கூற இளந்தூது கடமைப்பட்டு இருக்கிறது. மேலும், எம் ஒருங்கிணைப்பாளர் இரா. மஞ்சுளா அவர்களுக்கும், எங்களின் முதலாம் ஆண்டு ஆசிரியர், அன்பு அண்ணன் இளந்தூதுவின் தந்தை ஏ.இசட். இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் எங்கள் நன்றியினை உரித்தாக்குகிறோம்.

மேலும் இளந்தூதுவின் மடியில் சிறு குழந்தையாக நாங்கள் தவழ்ந்து கொண்டிருக்க காரணமாக அமைந்த பெண்ணியம் போற்றும் மைந்தர்களான 29-ஆம் ஆண்டு ஆசிரியர்கள் இரா.தினேஷ் குமார், க.மீனா,மா.நித்யகல்யாணி, ஆ.சிவச்சந்திரன், வீ.ஸ்டாலின் ஆகியோருக்கும் எம் பிரதிகள் தற்போது தங்கள் முன் பிரதிபலிக்க காரணமான விளம்பரதாரர்களுக்கும், அச்சகத்தினருக்கும் மற்றும் வாசிக்கும் அத்துனை நெஞ்சங்களுக்கும் இளந்தூதுவின் மனமார்ந்த நன்றி.

ஆசிரியர் குழு

# Dr.B.R.அம்பேத்கர்



அ.கமலக்கண்ணன்
இளம் கணிதம் [ முதல் ]





# மறைந்து போன மனிதநேயம்

ஏற்றம் மானிட உலகில்
எண்ணற்ற சேதங்கள் !
இங்கு மனித உணர்வுகளுக்கு மதிப்பில்லை
மனித நேயம் – இங்கு
வெறும் போலி நாடகம் !
மனதால் மென்மையானவள் –இங்கு
மனநலம் பாதிக்கப்பட்டவள் !
தவறுகளை கண்டு கொந்தளிப்பவன் – இங்கு
தற்காலிக கோமாளி !
இயந்திர மயமான நவீன உலகில்
இன்றியமையாதது மனித நேயம் !
இணைத்திடுவோம் கரங்களை
இனியவாழ்வினை நோக்கி....

இரா.மதிவதனி
இளம் கணிதம் [ நிறை ]



Scanned with OKEN Scanner

# இறப்பின் விளிம்பில்

என் கண்களில் வேறு உலகம் தெரிந்தது

என் வாயில் அமைதி என்ற வார்த்தை வந்தது

என் மனதில் அன்பு என்னும் ஆசை மலர்ந்தது

என் நினைவில் கடமைகளை முடித்தேன்

என் மனதில் அமைதியும் ஆணவமும் தோன்றியது

என் உடல் பக்குவப்பட்டது

என் முகம் அழகின் உச்சியில் சென்றது

என் மரணம் உலகின் ஆசையிலும்,

அமைதி என்ற உறக்கத்திலும்

பிறருக்கு நல்லது செய்தேன் என்ற

சந்தோஷத்திலும் இருந்து,

நான் உறங்கப்போகிறேன்...உறங்கப்போகிறேன்

உறங்கப்போகிறேன்...

**வி.விக்னேஷ்வரன்**
இளம் ஆங்கிலம் ( இடை )





# மை

செய்வதில் வேண்டும் நேர்மை

செய்யக்கூடாதது பிறருக்கு தீமை

சொல்லில் வேண்டும் உண்மை

தவறக்கூடாதது தன் கடமை

மனிதனுக்கு வேண்டும் பொறுமை

மனதில் இருக்கக்கூடாது பொறாமை

பிறருடன் வேண்டும் தோழமை

பேசக்கூடாதது தன் பெருமை

அனைவரிடமும் வேண்டும் ஒற்றுமை

எதிலும் வேண்டாம் வேற்றுமை

போற்ற வேண்டும் பெண்மை

வாழ்வில் வேண்டாம் நன்றியின்மை

**மோ.ரோஸ்லின் மேரி**
இளம் கணினி பயன்பாட்டியல் ( முதல் )



Scanned with OKEN Scanner

# அலைபாயுதே!

புலனத்தில் புலம்பித்தள்ளி
வலையொளியில் வசைப்பாடி
படவரியில் பள்ளிகாலத்தை கழித்து
அளாவியில் அகலக்கால் வைத்து
தொலைவரியில் உன்னையே தொலைத்து
காயலை-யில் காட்சி கண்டு
ஊடலையின் ஊன்றுகோலாய்
பகிரலையில் பண்பை பகிர்ந்து
முடக்கலைக்கே முக்கியத்துவம் கொடுத்து
வன்தட்டுவின் மனத்தை மதித்து
இயங்கலையில் மட்டுமே வாழும்
இளைய தலைமுறை
இந்தியாவை உயர்த்துமோ?

ஆசிரியர் குழு



ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்



# இளந்தூதுவும் நானும்

உடன் பிறந்த சகோதரன் இல்லை என்ற

எண்ணம் என்னை விட்டு பிரிந்த இடம்...!

அல்லவா இது...!

கல்லூரி வாழ்க்கையை இனிக்க வைக்கும்

இனிமையான நினைவுகள் அல்லவா இது...!

தினம் ஒரு புதிய தகவலை செய்தித்தாளில்

அறிந்த நாட்களைவிட...! உன்னில் அறிந்த

செய்திகள் அதிகமல்லவா...!

வாழ்நாள் முழுவதும் இதில் இருந்து

நான் பெற்ற கடனை... அடைக்க... வாய்ப்புகள்

கிடைக்க இறைவனிடம் மன்றாடுகிறேன்...!

கு.ஷாலினி
இளம் உயிரி தொழில்நுட்பவியல் (இடை)





# பழமொழியின் பரிதாபங்கள்!

1. கப்பலே கவிழ்ந்தாலும், கன்னத்தில் கை வைக்க கூடாது!

விளக்கம் : 'கப்பலே கவிழ்ந்தாலும் கன்னங்கோல் செய்யக்கூடாது!'.

கன்னங்கோல் என்பது சுவரில் ஓட்டை போட்டு திருடும் ஒரு திருட்டு முறை. அந்த காலத்தில் கப்பலை வைத்திருந்தவர்கள் பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். தங்களுடைய செல்வத்தை எல்லாம் கப்பலில் முதலீடு செய்திருப்பார்கள். விபத்தின் காரணமாக அந்த கப்பல் கடலில் மூழ்க நேரிட்டால் அவர்கள் ஏழ்மை நிலைக்கு தள்ளப்படுவார்கள். அதனால் அவர்கள், தங்கள் வாழ்விற்காக மனமுடைந்து திருட்டுத் தொழில் செய்ய கூடாது என்பதற்காகவே இப்படி மொழி உருவாக்கப்பட்டது.

2. கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை?

விளக்கம் : 'கழு தைக்க வரும் கற்பூர வாசனை'.

கழு என்பது பாய் தைக்கும் கோரை வகையை சேர்ந்தது. அந்த கோரையை ஒன்றோடு ஒன்றாக தைக்கும் பொழுது அதிலிருந்து கற்பூர வாசனை வரும். இதுவே காலப்போக்கில் இப்பழமொழியாக மருவியது.

3. 'ஆனைக்கு ஒரு காலம் வந்தா பூனைக்கு ஒரு காலம் வரும்!'.

விளக்கம் : ' ஆ நெய்க்கு ஒரு காலம் வந்தா பூ நெய்க்கு ஒரு காலம் வரும்'.

ஆ நெய் என்பது பசுவின் நெய். பூ நெய் என்பது தேனை குறிக்கும். நெய் ஆண்டு முழுவதும் தடையின்றி கிடைக்கும். ஆனால் தேன் வசந்த காலத்தில் தான் மிகுதியாக கிடைக்கும். இதற்கிடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்த எழுந்ததே இப்பழமொழி!

ஆசிரியர் குழு



Scanned with OKEN Scanner

# கேரளக்குரல்


கோடி கோடி உறவுகள்
கோடி கோடியாய் கொடுத்ததென்ன?
உறவுகள் கூட ஒதுங்கி இருக்கும் காலத்தில்
மக்கள் ஓடியாது இருக்க
ஓடி ஓடி உதவியவர்கள்...
பிஞ்சுக் குழந்தையின் மனதைக் கூட
பஞ்சாகக் காட்டிய சம்பவம்
ஆர்ப்பரிக்கும் ஆறுகளோ கோபத்தில்
இன்று ஆளைப்பறிக்கும் அபாயம்
தண்ணீருக்கு சொந்தம் கொண்டாடியதாலோ
என்னவோ? தண்ணீர் தனக்கு
சொந்தமாக்கி கொண்டது.
அணையில் நீர்மட்டம் உயர்ந்திருக்கிறது
வேற்றுமையிலும் ஒற்றுமைக் காண
உறவுகளுக்கு ஒற்றுமையாய் உதவ
கரம் கொடுப்பவர்களுக்கு
என் சிரம் தாழ்த்திய வணக்கங்கள்

க.யோகேஸ்வரி
இளம் கணிதம் ( இடை )





# சிரிப்பின் புன்னகை



ஆசிரியர் குழு

Manju Auto Finance

Rotary RID 2981

ROTARY MAKING A DIFFERENCE



Rtn. B. AYYASAMI
Secretary 2017-18
*ROTARY CLUB OF MAYILADUTHURAI KINGS*

Marij Auto Finance, Shop No.27, 141-142, Hama Center, Pattamangala St.,
Mayiladuthurai - 609 001. Cell: 97864 45623

........................................................

அவையாம்பாள்

தட்டச்சு பயிலகம்

(அரசு நிரந்தர அங்கீகார எண்கள் : 235459)

**செல் : 9715958518**

GSA காம்ப்ளக்ஸ், மெயின்ரோடு,
செம்பனார்கோவில்






## தமிழே!
## உனக்காக நாங்கள்

மங்கையின் கூந்தல் போல;
எங்கள் மனதில் பிணைந்திருந்தாய்...
எங்கள் குருதியின் அணுக்களில்;
அசைக்க முடியாமல் அமைந்திருந்தாய்...
பாரின் எவரும் பார்க்காத உயரத்தை
எட்டிப் பிடித்த தமிழ்!
உன்னை பேச கூச்சப்படும் எம்மக்களின்
நாவினை வெட்டி விடாதே...
உன் புகழை அகிலத்தில் அறிய செய்ய
எம் இளந்தூது மாணவர்கள் வளர்கின்றனர்


**தா.ஆம்ஸ்ட்ராங்**
இளம் கணிதம் ( முதல் )

# தவறு எங்கள் மேலா?

பயிரைக் கண்டு பெருமிதம் கொண்ட விவசாயிகள் இன்று வெறுநிலத்தைக் கண்டு வேதனைக் கொள்கிறார்கள். காரணம், விவசாயம் அழிந்து வருகிறது. விவசாயிகள் அவர்கள் படும் கஷ்டங்களை தம் பிள்ளைகள் படக்கூடாது என்று அவர்கள் பட்டப்படிப்புக்கு வித்திடுகிறார்கள். இன்று உழுநிலங்கலோ விளைநிலங்களாய் மாறிவிட்டது. இதற்கு காரணம் இளைஞர்கள் என்று சமூகம் கூறுகிறது. நாம் ஒவ்வொருவரும் மனதில் கேட்க வேண்டிய கேள்வி "விவசாயத்தை பிள்ளைகளுக்கு சொல்லி கொடுக்காதது பெற்றோரின் தவறா பிள்ளைகளின் தவறா?". பெற்றோர்கள் பிள்ளைகளை வெளிநாட்டிற்கும், வெளி ஊருக்கு படிப்பிற்கோ வேலைக்கோ அனுப்பிவிட்டு இங்கு அவர்கள் விவசாயம் செய்ய முடியாமல் அவர்கள் தலைமுறையுடன் முடிப்பது பெற்றோர்கள் தவறா? இளைஞர்கள் தவறா? இளைஞர்கள் சமூகத்தில் குற்றவாளிகளாக நிறுத்தப்படக் காரணம் அவர்களை பட்டப்படிப்பில் உட்படுத்தப்பட்டதும் பெற்றோர்களின் மனநிலை என்று கூறலாம். ஆனால், விவசாயத்தைக் காப்பது இளைஞரின் கடமையும் கூட, போகிற போக்கை பார்த்தால் ப்ளாஸ்டிக் அரிசி தான் அனைவரின் உணவாய் இருக்கும் போல.

ஆசிரியர் குழு





# சுதந்திரம்

சுதந்திரம் ஏனோ நமக்கு கிடைத்துவிட்டது
ஆனால் அனைத்திற்கும் சுதந்திரம் என்றாகிவிட்டது
நம் நாட்டை ஆங்கிலேயன் ஆண்டான் அன்று
ஆனால் நம் பெயரைச் சொல்லி நம்மையே அழிக்கின்றோம்
இன்று,
சுதந்திரம் என்பது நமக்கு நிரந்தரம்
என்று நினைப்பது நம் முட்டாள்தனம்
நமக்கே தெரியாமல் நம் சுதந்திரம் பறிபோகும்போது
நாம் கை கட்டி நின்று பார்ப்பது வேடிக்கைத்தான்
அன்று ஆங்கிலேயன் வரியை வாங்கினான் – நம்மை அடித்து
ஆனால் நாம் இன்று வரி கொடுக்கிறோம் சட்டத்தை மதித்து
நாம் அப்படி மதித்ததனால் தானோ என்னவோ
ஏமாற்றி வரியை வசூலிக்கின்றனர் ஏழைகளின் வயிற்றில்
அடித்து

அ.சையது ஹூசைன்
இளம் வணிகமேலாண்மை (முதல்)



Scanned with OKEN Scanner

**Selvis & Co**

**Furniture**

**9095555444**

**9095888777**


காமராஜர் சாலை, CRC டிப்போ அருகில், கோமதி தியேட்டர் ரோடு,
மயிலாடுதுறை.







## மரணத்தின் கடைசி நொடியில் தாய்ப்பால்



வெ.காயத்ரி
இளம் வேதியியல் ( முதல் )

# துருவங்கள் இரண்டு

1. மீன் × முள்ளங்கி
2. பசலைக்கீரை × எள்
3. திப்பிலி × மீன்
4. தயிர் × மீன்
5. துளசி × பால்
6. தேன் × நெய்
7. பால் × புளி
8. மோர் × வாழைப்பழம்
9. இறைச்சி × விளக்கெண்ணெய்
10. முள்ளங்கி × பால்
11. அகத்திக்கீரை × ஆல்கஹால்

இவை அனைத்தும் எதிர் × எதிர் பொருட்கள், உடலுக்கு தீங்கு விளைவிக்கும்.

இவை மலணத்தை கூட ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.

ஆசிரியர் குழு






# பண்பாட்டை மாற்றிய மாற்று எண்ணம்

தாயின் கருவறையில் பத்து
மாசம்...
வெளியே வந்து பார்த்தா...
இங்கு ஆரிதானது பாசம்...
அதிகமானது வேசம்...
ஆசானின் கரம் பிடித்து
கரும்பலகை அறையினுள்...
கால் வைத்து கல்விக்காக...
பண்பாடு... பாரம்பரியம் எல்லாம்
பெயரளவில்.. ஏட்டில்...
இதற்கு அப்படியே
இருந்திருக்கலாம் காட்டில்...
நாட்டின் பொருளாதாரம்
திண்டாடுவது சாலை ஓர திரு
ஓட்டில்...
அடுத்த வீடு... அடுத்தவர்
வீடானது...
எழுத மறுத்து பேனாவையும்
விரல் விட்டது

பேட்சன் ஜவகர்
இளம் விலங்கியல் (முதல்)



பார்பி
மகளிர் தையலகம்
Barbie
Ladies Tailors
இராகவேந்திர காம்ப்ளக்ஸ், தரங்கை சாலை,மயிலாடுதுறை

S.Balamurugan
Director
COM CARE SERVICES
97509 29436 (SERVICE)
94432 29436
04364 – 224060
comcareservice@gmail.com
| 36 |
| Mahadhana Street |
| Opp : VRS Thirumana Mahal |
| Mayiladuthurai 609001 |
| South India |






## என் அப்பா

பெற்றெடுத்த இரு பிள்ளைகளையும்
பெண்தானே என்று கருதாமல் – நான்
பெற்ற இரண்டும் என் இரு கண்
எனக் கருதிய என் அப்பாவிற்க்கு
இக்கவிதை சமர்ப்பணம்...!
எதிர்ப்புகள் பல வந்தாலும் – அதனை
எதிர்நோக்கி என்னை இவ்வுலகிற்க்கு
அறிமுகப்படுத்தினாய் நீ...
தத்தி தவழும் என் சிறுவயதில்
உன் மொத்த அன்பை முத்தத்தால் தந்தாய்
உன்னை ஒரு வார்த்தையில் வர்ணிக்க
வார்த்தை போதாதப்பா எனக்கு...
சொல்வதற்கு வார்த்தையே இல்லாமல்
வாயடைத்து போவாயப்பா பிற்காலத்தில்
உன் மகள் உனக்கு தரும் சிறப்பு...
தமிழ்மொழியை என் ஆர்வத்தின் வழி
கற்பித்ததுப்போல்
உன் புகழை இவ்வுலகமெல்லாம் சிறப்பிப்பேன்
என் சித்திரத்தின் வழி பரப்புவேன்
எங்கேயோ ஒரு மூலையில் – எனக்காக
அயராது உழைத்து
தன் மகள் உறங்கினால் போதும் என
உன் உறக்கத்தை நாளடைவில் கழித்தாயே...!
உன்னை ஒருநாளும் மறவேன்...!
என் உயிர் அப்பா...

**தி.வினோதினி**
இளம் கணினி அறிவியல் [ முதல் ]

## விவசாயி

கடவுளின் ஒரு அவதாரம் விவசாயி ஆனால்

அவர்கள் நிலையோ இன்று ஊசல் ஆடுகின்றது

சோறுக் கொடுத்துவனுக்கு சோதனையா?

கஞ்சி கொடுத்தவனது வாழ்க்கை காணல் நீராவதா?

மீத்தேனிலிருந்து மீளவேண்டும் எனப் போராடுகின்றாய்,

ஐயோ! வேண்டாம் ஹைட்ரோகார்பன் என்று

அலறுகின்றாய்,

பச்சை தமிழா பச்சை உடையணிந்து போராடுகின்றாயே

எதற்கா வெறும் பசுமைக்காகவா இல்லை

பாமர மக்களின் பசியை போக்குவதற்காக!

நாட்டின் முதுகெலும்பை நிமிர்த்த உன் முதுகு

வளைய பாடுபட்டவனே உன் தியாகத்திற்கு

தலைவணங்குகின்றேன்...

ம.க.சூர்யா
இளம் கணிதம் ( முதல் )





## மரணத்தின் ச(ஜ)னனம்

நாம் உடலில் உறுப்புகளை பதப்படுத்தி வைக்கப்படும் நாட்கள்.

சிறுநீரகம் – 72 மணி நேரம்

கல்லீரல் – 18 மணி நேரம்

இதயம் – 5 மணி நேரம்

நுரையிரல் – 5 மணி நேரம்

கணையம் – 20 மணி நேரம்

கண் விழித்திரை – 10 நாட்கள்

## மரணத்தின் பின் மனித உடல்

36 மணி நேரத்தில் உடலில் ஈக்கள் முட்டை இடும்.

60 மணி நேரத்தில் துர்நாற்றம் தோன்றும்.

3 நாட்களில் நகம் கழலும்.

4 நாள்களில் ஈறுகள் தொலைகிறது.

5 நாள்களில் மூளை உருகும்.

6 நாள்களில் வாயுவால் வெடிக்கிறது.

2 மாதங்களில் உடல் உருகி திரவமாகிறது.

ஆசிரியர் குழு



Scanned with OKEN Scanner

☎ : 04364 220998
91504 94645

GEA

GUHAN ELECTRICAL AGENCIES

No.111, Gandhiji Road, Near Koranad Busstop,
Mayiladuthurai - 1.

K.SUDHA



ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

# அம்மா

அன்பின் உருவம் நீ
அதிகாரத்தின் துருவம் நீ
ஆளுமையின் புருவம் நீ
ஆற்றல்களின் பருவம் நீ
ஈகையின் சிகரம் நீ
உண்மையின் உறுதி நீ
உறுதியின் உறுதி நீ
ஊரவர்கெல்லாம் தாய் நீ
எதிரிகளுக்கு சிங்கம் நீ
ஏனையருக்கு தங்கம் நீ
ஐயங்களுக்கு அச்சம் நீ
ஐஸ்வர்யத்தின் மச்சம் நீ
ஒளிகளின் விளக்கு நீ
ஓநாய்களை விளக்கு நீ
ஔவையின் பேத்தி நீ
ஃ எனும் ஆயுத எழுத்தைப் போல் ஆயுதம் நீ
காவியக்கலைகளின் கலைவாணி தாய் நீயே!
என் சிரம் தாழ்த்தி
உன் தாள் பணிந்து வணங்குகிறேனம்மா

மு.கார்த்திகேயன்
இளம் வேதியியல் ( முதல் )

# இல்லை... இல்லை...

1. அரேபியாவில் ஆறுகள் இல்லை
2. அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை
3. உத்திரப் பிரதேசத்தில் தென்னை இல்லை
4. யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை
5. ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை
6. சிங்கப்பூரில் காக்கை இல்லை
7. ஹவாய் தீவில் பாம்பு இல்லை
8. பூடானில் திரை அரங்கு இல்லை
9. பறவைகளுக்கு வியர்வை சுரப்பி இல்லை
10. மலை பாம்புகளுக்கு விஷம் இல்லை
11. கிவி பறவைகளுக்கு இறக்கை இல்லை
12. கடலில் முதலைகள் இல்லை
13. மண்ணுளி பாம்புக்கு கண் இல்லை
14. வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை
15. ஆமைக்கு பற்கள் இல்லை
16. நண்டுக்குத் தலை இல்லை
17. நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை
18. யானை தும்பிக்கையில் எலும்பு இல்லை
19. நேபாளத்தில் பகலில் மழை பொழிவது இல்லை
20. சிங்கமும், புலியும் ஒரே காட்டில் வசிப்பது இல்லை

ஆசிரியர் குழு



ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்




ஆசிரியர் குழு

# அ முதல் ஃ வரை

"அ"கிலம் முழுவதும் அலசிப் பார்த்தாலும்
உங்களைப்போல் யாருமில்லை
அறமே உருவான ஆசிரியர்களே! - சமூகத்தில்
"ஆ"பத்தான நிலையில் உள்ள மாணவரையும்
அன்பால் திருத்தி கரை சேர்ப்பவர் நீவிர்!
"இ"ளைப்பாற நேரம் கூட பல நேரங்களில் உங்களுக்கு
கிடைக்காது எங்களால்!
"ஈ"கை உள்ளத்தை பிறவியிலேயே கொண்டவர் நீவிர்!
"உ"ள்ளத்தை உறுதியாகவும்,மாற்றதாகவும்
எந்நேரமும் வைத்திருப்பவர் நீவிர்!
"ஊ"ழல் இல்லாது மனம் உனது!
"எ"ப்படி எங்களை செதுக்க வேண்டும் என
எங்களை சிற்பியாய் நுட்பமாய் செதுக்குவாய்!
"ஏ"ட்டறிவு மட்டுமின்றி பொது அறிவையும் சேர்த்து புகட்டுவாய்!
"ஒ"ன்றோடு ஒன்றாகினோம் நாம் கல்வியால்!
"ஓ"டம் எப்படி பயணம் செய்பவர்களைக் காக்குமோ
அதைப்போல் நீ எங்களை ஓடம் போல் காப்பாய்!
"ஔ"வை பாட்டியை நான் அறிந்ததே உன்னால் தான்!
"ஃ"க்கு மூன்று புள்ளி, நான் மனிதனானதிற்கு
நீ முக்கிய புள்ளி

**மா.அருண்குமார்**
இளம் வேதியியல் [ இடை ]





## அன்னையர் இல்லம் இல்லாத இடம் வேண்டும்

அன்று நீ உறங்க இடம் அளித்தால் (தாய்)
அவள் கருவறையில்
இன்று நீ அவள் உறங்க இடம்
அளிக்கவில்லை வீட்டின் கழிவறையில் கூட

## நாய் என்றாலும் தாய் ஆகவே கருதும் மனம்

உன் பின்னே அலைகிறேன் என்று
என்னை ஒரு நாயாக எண்ணாதே
நான் உன்னை ஒரு தாயாகத்தான்
எண்ணுகிறேன்

## நன்றி சொல்ல வார்த்தை இல்லை

அன்னையர் தினத்தன்று வாழ்த்துக் கூறினேன்
அன்னையிடம்
நண்பர்கள் தினத்தன்று வாழ்த்துக்
கூறினேன் நண்பனிடம்
ஆசிரியர் தினத்தன்று நன்றி கூறினேன்
இறைவனிடம் ஏன் உன்றால்
என்னை வாழ்த்தும் ஆசானை நானும் வாழ்த்த
வாய்ப்பை அளித்ததற்கு

**என்.ஐயனார்**
இளம் விலங்கியல் [ முதல் ]



Scanned with OKEN Scanner

# கருமையின் அழகு



கருமை என்பது வெறும்
கறுப்பு நிறம் மட்டும் அல்ல,
பல நிறம் கொண்ட
வண்ணங்களின் தொகுப்பு

க.அபிநயா
இளம் வணிகம் ( முதல் )





# இது தெரியாம போச்சே...

எங்கடா? தேள்-ல காணும்?
தேள் கடித்தவர்க்கு வயித்தியம் பார்த்து
விட்டால் – இதய அறுவை சிகிச்சையோ,
ஆஞ்சியோ பிளாஸ்டடோ தேவையில்லை.
தேளில் உள்ள மார்க்கட்டீன் என்ற விசம் இதய
இரத்த குழாயில் கொழுப்பு படிவதை தடுக்கிறது.
இதய நோய் வராமல் பாதுகாக்கிறது.
தேனீ :
இரத்த கொதிப்பு வராது.
செய்யான் :
சர்க்கரை நோய் வராது.
சங்குழவி :
கேன்சர் வராது.

ஆசிரியர் குழு

# வாழ்க்கை

கடிகாரத்தின் உள்ள முள்ளின்
வேகம் பூமியில் வாழும்
மனிதர்களுக்கு இல்லை

பி.வர்ஷா
இளம் கணினி அறிவியல் ( முதல் )



Scanned with OKEN Scanner

# வெற்றிக்கு வழி

இரண்டு இளைஞர்கள் ஓர் ஓட்டுப்பந்தயத்தில் பங்குபெற்று வீடு திரும்பினார்கள்.

வழியில் ஒரு பெரியவர் கேட்டார், "என்ன ஆயிற்று ?".

ஒருவன் சொன்னான், "நான் தோற்று விட்டேன்"

அடுத்தவன் சொன்னான். "நான் இந்த முறை வெற்றி பெறவில்லை".

இவ்விருவரில் யார் சிறந்தவர்? இரண்டு பேரும் தோற்றுப்போனவர்கள் தானே !

இதிலென்ன வேறுபாடுகள்? முதல் இளைஞன் மனதலவிலும் தோற்றுப் போனவன்.

அவன் அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு குறைவு.

ஆனால் இரண்டாவது இளைஞர் இம்முறை மட்டுமே தான் நான் வெற்றி பெறவில்லை என்கிறான். இனி வெற்றி பெறும் வாய்ப்பிருப்பதாக அவர் நம்புகிறான். நான் இந்த முறை ஏன் வெற்றி பெறவில்லை என்பதைக் கூட அவர் அலசிப் பார்க்கக் கூடும் அடுத்த முறை இக்குறைகளைக் களைய முயற்சிப்பார். இன்னும் அதிகமாக முயன்று அவர் வெற்றி பெறும் வாய்ப்பை தனக்குள்ளே உருவாக்கிக் கொள்வார்.

வாழ்க்கையில் இந்த வகை இளைஞர்கள் தான் வெற்றிப் பாதையில் வலம் பெற்று, நாட்டை உயர்த்துவார்கள்.

ஆ.மகாலெட்சுமி
இளம் வேதியியல் [ நிறை ]





# மனிதன்

குரங்கில் இருந்து வந்த நீ
குரங்கை வேட்டை ஆடினாய்
மரத்தில் தொங்கிய நீ
மரத்தை வெட்டினாய்
பழத்தை பச்சையாக தின்ற நீ
அதை காசுக்கு விற்றாய்
மத்த மிருகங்கலோடு சேர்ந்து வாழ்ந்த நீ
அதே விளங்கினை வேட்டை ஆடினாய்
இலையை வைத்து மானம் காத்த நீ
பட்டு புழுவை கொன்று ஆடை ஆக்கினாய்
உன்னை போல்
குரங்கிலிருந்து வந்த மற்ற மனிதர்களை
நீ இரக்கம் இல்லாமல் கொல்கிறாய்
அடர்ந்த காடுகளை இருந்த இடத்தில்
பங்களா வீடுகளை கட்டினாய்
நல்ல நல்ல தேக்கு மரத்தை வெட்டி
கதவுகளும் கட்டில்களும் செய்தாய்
சிங்கத்தை கண்டு ஓடிய நீ
சிங்கத்தை கொன்று அருங்காட்சியில் வைத்து
நீ ஓடி ஆடி விளையாடிய காட்டை
நீ அடியோடு அழித்தாய்
மனிதா நீ சாகும் போது
எதை கொண்டு செல்வாய்

ச.தெ.அனிருத்தன்
இளம் ஆங்கிலம் [ முதல் ]



Scanned with OKEN Scanner

பொறியாளர். இள.முத்தமிழன் DCE.,(B.Tech.,)M.B.A.,

+91 9865044112
+91 9994942211
04364 - 312364

தமிழன்
பில்டர்ஸ்

- Plan
- Estimate
- Building
- Elvation
- Water Proofing

& Building Contractor

நெ.17 முதல் தளம் கமால் மேன்சன், 141 பட்டமங்கலத்தெரு
மயிலாடுதுறை- 609001

E.Mail : muthamizhan.e@gmail.com





# கலசத்தின் கதை

நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள் ஆகியவை இதனுள் இருக்கும்

"வரகு" மின்னலை தாங்கும் ஆற்றலை உடையது. எனவே தான் இதனை அதிக அளவில் கலசத்தில் இடப்படும்.

மேலும் இவை 12 வருடங்கள் வரை தாக்கு பிடிக்க கூடியது.

இயற்கை சீற்றத்தினால் விவசாயம் அழிந்து போனாலும், மீண்டும் விவசாயம் செய்ய தானியங்களை கோபுர கலசத்தில் இருந்து எடுத்துக் கொள்ளலாம்.

இவை 12 வருடங்களுக்கு ஒரு முறை "குடமுழுக்கு விழாவின் மூலம்" மாற்றப்படுகிறது.

இதன் காரணமாக தான் 12 வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா நடைபெறுகிறது.

ஆசிரியர் குழு

## தேன்

பொங்கலுக்கு தேவை சர்க்கரை

மாணவர்களுக்கு வேண்டும் படிப்பில் அக்கறை

வீட்டில் இருப்பது அடுப்பாங்கறை

அது படிக்காத பெண்களுக்கான ஒரு சிறை

## நெருப்பு

பூமியில் இருப்பது மண்

மண்ணில் இருப்பது பொன்

இந்த இரண்டும் கலந்தவள் தான் ஒரு பெண்

## மலர்

ஒற்றுமை

- பூக்களின் மொட்டு

சிரான ஒற்றுமை

-பூக்கள் மலர்வது

ஒற்றுமை தளர்வது

பா.அஜித்
இளம் கணினி பயன்பாட்டியல் [ முதல் ]



ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

## கோப்பைகள்

கார்பிலியன் கோப்பை – டேபிள் டென்னிஸ்.

வெல்லிங்டன் டிராபி – ரோயிங்.

புளூ ரிபான்ட் கோப்பை – குதிரைப் பந்தயம்.

பாகஸ்தான் ஓபன் – ஸ்குவாஷ்.

பாரத் கேசரி – மல் யுத்தம்.

ஸ்வத்திங் கோப்பை – டேபிள் டென்னிஸ்.

கிராண்ட் நேஷனல் – குதிரைப் பந்தயம்.

ரைடர் கோப்பை – கோல்ப்.

டூர் டி பரான்ஸ் – சைக்கிளிங்.

ஆர்தர் வால்கர் டிராபி – பில்லியர்ட்ஸ்.


சூப்பர் பவர் – பேஸ்பால்.

வின்செஸ்டர் கோப்பை – போலோ.

தோல்வியின் விளிம்பில் இருந்து

முன்னேறி ஓடியவனுக்கு உலக கோப்பை.

ஆசிரியர் குழு



படம் பார்த்து கவிதை சொல்லுங்கள்

ஆசிரியர் குழு





## முயற்சி

காற்றில் சிக்கி தவிக்கும்
சிறகாய் இருக்க விரும்பு
உன்னால் பறக்கும்
பறவையை நினைத்து

## எழுச்சிப் பெண்ணே

விண்ணைத்தாண்டி வருவாயா?
விழி திறந்து காத்திருக்கிறேன்
உன்னை முடக்கிய
மூட நம்பிக்கையை முடக்க

இர.ஜனனி
இளம் மின்னணுவியல் [ இடை ]



Scanned with OKEN Scanner




S. Ramakrishnan
9443524536

7STAR

HD VIDEO PHOTOS

Visalam Complex, Town Extn.,
Near Old Bus stand,
Mayiladuturai - 609 001





SGR
PHOTO COPIER SHOP

Photo copy (B/W & Color)


- DTP works (Tamil, English & Maths)
- Printout, Scanning, Lamination
- School, College PVC ID Card
- College Project Works & Binding
- Online Examination Apply
- UG, PG, M.Phil, Ph.D, Project Works

#111, No.2 Road, Koranad, Mayiladuthurai.
Cell: 9443275740 | Ph:04364 222740/220740

Branch: #3B, Ayyappan Complex, Kamarajar Road,
(opp: Gomathi Theater), Mayiladuthurai.



Scanned with OKEN Scanner



JSR GROUPS
SRI ANJANEYA BAKTHI CHANNEL
www.sabctamil.com
JSR COMPUTER EDUCATION CENTER
GOD BOOKS DEVOTINOL SOCIAL NETWORK
G Books
www.gbooks.in
GET IT ON Google Play
Download on the App Store
MAPPADUGAI.MEATTU AGARAHARAM MAYILADUTHURAI.609003
CELL.9488588105
PIC•COLLAGE








அழகான வடிவங்களில்
ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில்
தேர்ந்தெடுக்க வாருங்கள்..! வாங்கி மகிழுங்கள்..!!!
மஹாராஜா
புட்வேர்ஸ் • லக்கேஜஸ்
சுகமான நடை.. சொகுசான பயணம்...
PUMA
LIBERTY
crocs
adidas
WOODLAND
Reebok
Bata
Hush Puppies
Franco Leone
WILDCRAFT
FILA
143, பட்டமங்களம் தெரு, மயிலாடுதுறை - 609 001
Ph : 04364 225234








# தமிழரும் கேரளாவும்

நீர்! நீர்! என்று அடித்துக் கொண்டவர்களையெல்லாம்
இன்று நீர் அடித்து சென்றது.
கேரளாவினற்கு நடந்த அவலங்களைப் பார்த்து பல
நபர்கள் பார்வையிட்டார்கள். ஆனால் தமிழர்கள் தான்
முதலில் உதவிக்கரம் நீட்டினார்கள் நாங்கள் கேட்கும்
உயராத நீர் மட்ட அளவு தானாக உயர்ந்ததன் விளைவு
கேரள மக்களின் கண்ணீர்
தமிழரின் ஈடு இணையற்ற குணத்தை அந்த பிஞ்சு
நெஞ்சின் இதயம் உலகிற்கு உணர்த்திவிட்டது
தமிழருக்கு தண்ணீர் மறுக்கப்பட்டது அன்று
ஆனால் இன்றோ தமிழரால் எல்லாம்
கிடைக்கப்பெற்றது அவர்களுக்கு மேட்டூர்
அணையில் நிரம்பப்பட்டிருப்பது தண்ணீர்
அல்ல - அது மலையாளியின் கண்ணீர் என்று
உணர்ந்த ஒவ்வொரு தமிழனும் கரைபுரண்டு
ஓடினான் அவர்களை காப்பாற்ற அந்த சின்ன
குழந்தை சிறகடித்துப் பறப்பதற்கு சேமித்து
வைத்து பணம் செலவிட்ட விதத்தில் தமிழரின் புகழ்
சிகரம் நோக்கி சிறகடித்துப் பறக்கிறது

அ.வஜிஹத்துன்னிசா
இளம் கணிதம் [ இடை ]



Scanned with OKEN Scanner

KS
PATTU CENTRE

KS
MEN'S WEAR

104,M.G. Road, Koranadu, Mayiladuthurai
Phone : 04364 - 223012, 241122





## மகாகவி பாரதியார்



பா.பவித்ரா
இளம் வேதியியல் [ முதல் ]

CELL : 9442398111
CELL : 8015411212

Ravi karthick PHOTOGRAPHY
KUMAR DIGITALS


Synthetic & Karishma Album
Video Coverage
ID Cards
Lamination
HD Mixing Video's
Flex Boards
Advertisements





95-A, State Bank Road,
(Near Happy Village Restaurant) Mayiladuthurai







ஆசிரியர் குழு



**அன்னை - ராஜம் தட்டச்சு பயிலகங்கள்**

(அரசு நிரந்தர அங்கீகார எண்கள் : 235484,235485)

5 முறை தட்டச்சு தேர்வில் தமிழகத்தில்

முதல் இடம் பிடித்த ஒரே பயிலகம்

179 பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை 609 001

24C/1 டவுன் எக்ஸ்டென்ஷன்,
மயிலாடுதுறை 609 001
(பெண்களுக்கு மட்டும்)

**தொடர்புக்கு : 04364 228892, 227611 ,240140**

**செல் : 9486717611**




ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

## இருளில் ஓர் வெளிச்சம்

அந்த தூய இருட்டில், அதில் பார்பதற்கு ஒன்றுமே தெறியவில்லை ஒரு மின் மினிப்பூச்சி கையில் இருந்தால் கூட போதும் என்று தோன்றியது. முடிவில்லாத அந்த இருட்டில் எங்கிருந்தோ ஒரு குரல், ஆண்டோ என்ற என்னுடைய பெயர் எதிரொலித்துக்கொண்டே இருந்தது. தூய்மையான அந்த இருட்டில் தொலைவிலிருந்து ஒரு வெளிச்சம் என்னை நோக்கி வந்தது. பார்க்க ஆறு அடி உயரமும் மனிதன் போன்ற உருவத்தையும் ஒத்து இருந்தது. ஆனால் அதன் முகத்தை என்னால் சரியாக யூகிக்க முடியவில்லை.ஒரு வேலை இது கடவுளாக இருக்குமோ என்று செய்வதறியாது நின்றேன். அதனிடம் பேசுவோம் என்று நினைத்து பேச முயன்றேன் . ஆனால், என் உதட்டை மட்டுமே அசைக்க முடிந்ததே தவிர வார்த்தைகள் ஏதும் வெளிவரா வண்ணம் இருந்தன. இருப்பினும், மெல்ல, மெல்ல உதட்டை அசைத்து நீ யார்? என்ற மெல்லிய குரலில் கேட்டேன். நான் இது வரை அந்த அளவிற்கு பதட்டத்தில் இருந்ததில்லை. ஒரு பளிங்குப் போன்ற குரலில் அந்த உருவம் என்னிடம்

“நீ என் அடிமை என்றது”

மறுநொடியில் வெடுக்கென்று அதைத் தாக்க என் கைகளை உயர்த்தினேன். ஆனால், என் கைகல் அதனுள் ஊடுருவியது.

‘இது நிஜமாகவே கடவுளாகத் தான் இருக்கும்’ என்று நான் ஒரு தெளிவிற்கு என் முதுகிற்கு பின்னால் ஏதோ சத்தம் திடீரென்று கேட்க, பத்தடி தூரத்தில் இருந்து ஒரு மகிழுந்து என்னை நோக்கி வந்தது. ஆனால் என்னால் நகர முடியவில்லை. அது அருகில் வந்ததும் அவ்வளவுதான் என்று என் கண்களை இறுக மூடிக்கொண்டேன். சட்டென்று என் கண்களை திறந்து பார்க்கும் போது, அது என் வலது காலின் கட்டை விரலில் சிறு பொம்மையாக மாறிமோதிக் கிடந்தது. அப்போது என் இடது தோளில் மெதுவாக கை வைத்து என்னை அழைத்தது. நடப்பதறியாது திகைத்து அதன் முகம் பார்த்து மீண்டும் நீ யார்? என்று கேட்டேன்.

நான் உனக்கு சில விஷயங்களைக் கற்றுத்தர வந்தவன், என்றும் நீ குழப்பத்திலிருந்து மீண்டு ஒரு தெளிவிற்கு வர உதவுவேன் என்று கூறியது. அப்படியானால் நான் எந்தக் கேள்வி வேண்டுமானால் கேட்கலாமா?

நல்ல பதில் தான் : எனக்கு எளிமையாக புரியும் படி எடுத்துக் கூறினாய்.

அது. என் கடமை. சரி, காலத்தை பற்றி சொல்.

காலம்... இந்த பிரபஞ்சத்தின் நிலையான ஒரு விஷயம் காலம் மட்டும் தான். இந்த பிரபஞ்சத்தின் தலை சிறந்த தீர்க்கதரிசியும் அதுதான் துரோகியும் அதுதான். ஏனென்றால், அவன் நொடிக்கு நொடி மாறுபவன் வாழ்க்கையின் இரு துருவங்களான இன்பத் துன்பங்களை சரியாக பிரித்துக் கொடுப்பதில் அவன் வல்லவன். கணக்கிட முடியாத கணிதம் அவன். ஒருவேளை, நீ கடவுளாகவோ, அல்லது வேறு எதோ அமானுஷ்ய சக்தியாக இருந்தல் நான் கேட்பதை ஏன் நீ கொடுக்கவில்லை? கொடுக்குறதா? நான் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை. ஏனென்றால் உயிரினங்கள் உருவாவதற்கு முன்னரே உங்களுக்கு தேவையானது கொடுக்கப்பட்டுவிட்டது. நீ தேடும் அனைத்தும் உங்கள் கண் முன்னரே உங்களுக்காக காத்துக்கிடக்கின்றன. உங்களுக்குத் தான் எதை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தெரியவில்லை. நான் விடைபெறுகின்ற நேரம் வந்துவிட்டது.

சற்று பொறு...........

கடைசியாக ஒரு கேள்வி!

கடவுள் என்றால் என்ன?

மனிதர்களுக்கு நம்பிக்கை அதிகம் என்பதை நன்கு அறிந்தவன் நான். உங்கள் நம்பிக்கைக்கு கொடுத்த பெயர் தான் கடவுள். உங்கள் நம்பிக்கைக்கு கொடுத்த ஒரு உருவம் தான் விக்ரகம். அதனால் தான் அவை இன்னும் கருப்பு நிறத்திலே உள்ளன. உன் கேள்விகள் அனைத்திற்கும் விடை கிடைத்துவிட்டதல்லவா? இனியாவது விழித்துக்கொள்...

இப்போதாவது நீ யார் என்று சொல்? எல்லோரும் என்னை வாழ்க்கை என்று அழைப்பார்கள் விழித்துக்கொள்... விழித்துக்கொள்...விழித்துக்கொள்... திடீரென்று நான் கனவில் இருந்து விழித்துக்கொண்டேன். ஓர் தெளிந்த நீரோடையாக என் அதிகாலைப் பொழுது தொடங்கியது.

சு.சுகிபிராபகரன்
இளம் கட்புலம் ( இடை )






Daily Service A/c Sleeper Coach
Daily Mayiladuthurai - 11.45
Daily Chennai - 9.15

SRK Travels
Business Class A/C Sleeper Coach
CARGO SERVICE
Mobile: 9403168119



Branch Office
RRS Complex,
Opp. New Bus stand,
Thanjavur - 613 005

Branch Office
No. 8, Balaji Complex,
Sasthra University Road,
Kumbakonam - 612 001

11.00 PM
CHENNAI 9.45 PM
KUMBAKONAM
THANJAVUR 9.45 PM

95663 84854
94877 65655
94435 24536

Cashless Travel
Paytm & All cards Accepted

All Video & Camera Images
Wedding | Events | Portfolio Cell : 82209 69706
88257 16569
சிம்பு மாடலிங் ஸ்டுடியோ
HD வீடியோ & லேமினேசன்
No. 12, அவையாம்பாள்புரம், OSM நகர்,
மதனா மருத்துவமனை அருகில், மயிலாடுதுறை
E-mail : simbudisner@gmail.com




Scanned with OKEN Scanner

## பெண் சுதந்திரம்

தாய்பாலின் வாசம் போகும்
முன்பே பாலியல் தொல்லையா?
உன் ஆண்மைக்கும் ஆசைக்கும்
உணவோ இந்த பிஞ்சு குழந்தையா?
பெண்ணாய் பிறந்தால் இந்த
உலகில் சுதந்திரம் இல்லையா?
உன் மிருக தனத்திற்கு
அவளின் கற்புதான் கொள்ளையா?
இதே நிலைமை தொடர்ந்தால்
இதற்கு மரணம் தான் எல்லையா?

**ச.விஜய்**
இளம் வேதியியல் [ முதல் ]

## தோல்விகள்


தோல்விகள் என்பது
உன்னை தூங்க வைக்க
பாடும் தாலாட்டு அல்ல
நீ நிமிர்ந்து நிற்பதற்கான
தேசிய கீதம்...

**கோ.அரவிந்த்குமார்**
இளம் வேதியியல் [ முதல் ]





## வறட்சியின் கொடுமை



ஆசிரியர் குழு



Scanned with OKEN Scanner

## மரம் வளர்ப்போம்

மரங்களை வெட்டாதீர்கள்
அவை நாளை உங்களுக்கு காற்றினை தரும்
மரங்களுக்கு தண்ணீர் ஊற்றுங்கள்
அவை நாளை உங்களுக்கு மழையாக தரும்
மரங்களை பாதுகாப்பீர்!
அவை நாளை உங்களை வாழ வைக்கும்
அதனால், மரங்களை வளர்ப்போம்!
கோடி நன்மையை சேர்ப்போம்!

**தி.ஓவியா**
இளம் ஆங்கிலம் ( முதல் )

## பலம், பலவீனம்

உன் பலம் உன் கோபம் எனில்
இவ்வுலகில் பலவீனமானவன் நீ தான்!
உன் பலவீனம் அன்பு என்றால்
இவ்வுலகில் பலமானவன் நீ மட்டும் தான்

**து.சிவரஞ்சனி**
இளம் கணினி பயன்பாட்டியல் ( முதல் )






# LOVELY BROWSING CENTRE

**IRCTC Authorised, Railway, E - Ticket Booking Agent**

### எங்களின் சிறப்பு அம்சங்கள்

- அனைத்து ஆன்லைன் Payment - களும் செலுத்தப்படும்.
- அனைத்து விதமான ஆன்லைன் விண்ணப்பங்களும் செய்துதரப்படும். மின்சார கட்டணம் செலுத்தப்படும்.
- பஸ் & ரயில் விமானம் டிக்கெட் புக்கிங் செய்து தரப்படும்.
- பாஸ்போர்ட் (Passport Appointment ) எடுத்து தரப்படும்.
- கலர் பிரிண்ட் & போட்டோ பிரிண்ட்
- ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை பிரிண்ட் எடுத்து தரப்படும்.
- பிரிண்ட் & லேசர் பிரிண்ட், ஸ்பைரல், லேமினேசன் & Chart
- பைண்டிங், ஸ்கேனிங் & இ - மெயில்
- Pan Card எடுத்து தரப்படும்.
- தமிழ் மற்றும் ஆங்கிலம் டைப்பிங் DTP செய்துதரப்படும்.
- வேலைவாய்ப்பு பதிவு & புதுப்பித்தல்
- ஜெராக்ஸ் & கலர் ஜெராக்ஸ்
- சபரிமலை Ticket, Thirupathi Devasthanam Ticket Booking.
- Passport Size & Max Size & A4 Size Photo print
- ஆதார்,பான், வாக்காளர் அட்டை,ஓட்டுநர் உரிமம் PVC Card போட்டுத்தரப்படும்.
- Project Work செய்துதரப்படும். பட்டா சிட்டா & EC எடுத்து தரப்படும்.
- CD & DVD Writing Desktop and Laptop Service and Software Installation.
- Mobile & System App Installation.
- Aadhar Mini ATM. (ஆதார் எண்ணை பயன்படுத்தி அனைத்து வங்கிகளிலிருந்தும் பணம் எடுக்கும் வசதி)

**வேலை நேரம் : 9.00 Am To 9.00 Pm**

Old Bustand Opp, N.M.Zackriya Building,
Mayiladuthurai -609001
ph : 04364-222517 cell : 9443235172
E.mail : lovelymyl@gmail.com

Cutchery Road HAthi Complex, Iyengar Bakery Terrace
Mayiladuthurai -609001
ph : 04364-222516 cell : 9443235172
E.mail : lovelybranchmyl@gmail.com

## கண்மை அல்ல பெண்மை

தாயின் கண்களில் இட்டுள்ள“கண்மை”
போன்று நினைக்காதீர் பெண்மையை
அது கருவிழியில் இடப்பட்டுள்ள
கண்மை அல்ல
கண்களில் கானும் கருமை திரள்

## உயிர் சித்திரம்


அடி முடி தேடினாலும்
அகராதியை திரட்டினாலும்
முழுமையான அர்த்தம் அறியமுடியாத
உயிர் சித்திரம் “அம்மா”

**இரா.பிரியங்கா**
இளம் கணினி பயன்பாட்டியல் ( முதல் )



ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

## தொலைந்து போன தூக்கம்



ஆசிரியர் குழு

# அறிய மறந்த அரிய செய்தி

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் இயற்கையால் உண்டானவைதான் எல்லா உயிரினங்களின் அடிப்படை இயற்கைதான் இதை அனைத்து உயிரினங்களும் உணர்ந்துள்ளன. ஆனால் மனிதன் அதன் முக்கியத்துவத்தை முக்கியமாக கருதுவதில்லை எவ்வளவுதான் அனைத்து உயிரினங்களை விட மனிதன் அறிவால் மேம்பட்ட உயிரிகமாக இருந்தாலும் இயற்கை அறிவில் பின் தங்கியே உள்ளான். அனைத்து உயிரினங்களைப் போலவே மனிதர்கள் ஆகிய நாமும் இயற்கையின் கூட்டமைப்புதான். இயற்கையின் வகைப்பாடான நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் உயிரினங்களும் (மனிதன் உட்பட) நெருங்கிய தொடர்பு உண்டு இது பலர் அறியாத ஒரு உண்மையாகவே உள்ளது. இந்த பஞ்சபூதங்களும் நம்முடைய உடலின் சமநிலையை பல வடிவங்களில் காக்கின்றன.

| | | |
|---|---|---|
| நீர் | அருந்தும் நீர் மற்றும் நீர் சார்ந்த பொருட்கள் மூலமாக | உடலில் குருதி (இரத்தம்) மற்றும் ஹார்மோன் |
| நிலம் | நிலத்தில் விளையும் உணவின் மூலம் | உடலின் சதை எலும்பு போன்ற திட உறுப்புகளாக மாறுகின்றன. |
| காற்று | சுவாசிக்கும் ஆக்ஸிஜன் மூலமாக | உடலின் உயிர் ஆற்றலாக மாறுகின்றன. |





| | | |
|---|---|---|
| காற்று | சுவாசிக்கும் ஆக்ஸிஜன் மூலமாக | உடலின் உயிர் ஆற்றலாக மாறுகின்றன. |
| ஆகாயம் | வானிலை மாற்றம் சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்ப | மன உணர்வில் மாற்றம் உண்டாகும். (இது உணர்வுப்பூர்வமானது). |
| நெருப்பு | சுற்றுச்சூழல் வெப்பம் மூலமாக | உடல் வெப்பநிலை மற்றும் சீரான சக்தியாய் பரிணாமிக்கிறது. |

இவ்வாறு உயிரானது உயிர் பொருட்களின் கூட்டு நிகழ்வின் காரணமாகவே நிலைத்திருக்கின்றது. நம்மை சுற்றியுள்ள இந்த பொருள்களின் தன்மையை பொறுத்து. நம் உடலில் அதனால் சமன்செய்யப்படும் அங்கங்களின் தன்மையும் அமையும்.

ஆகையால் இனிமேலாவது பிறருக்காக இல்லை யெனினும் நமக்காக இயற்கையை காப்போம்.

அ.இரா.அருண்அபிஷேக்
இளம் விலங்கியல் ( முதல் )











# புரிந்து செல்

மரத்தின் உயரத்தை தொட நான் விரும்புகிறேன்

மேகத்தை தொட ஆசைப்படுகிறேன்

வெற்றி பெற ஆசைபடுவதைவிட

வெற்றியை நோக்கி எப்படி செல்வது என்று சிந்தி

பூக்களைப் பறித்தால் தான் பயன்படுத்தமுடியும்

பல தோல்விகளை பார்த்தால் தான் அனுபவம் புரியும்

நல்ல எண்ணங்களை கொண்டு

நல் விதையை விதை

நாளை இவ்வுலகம் படிக்கும்

உன் கதை...

அ.முகமது சாகுல்
இளம் வணிகம் ( நிறை )



Scanned with OKEN Scanner

## கவிதையின் மேல் காதல்

காதல் கவிதை எழுதினேன்
கவிதை என்னிடம் கேட்டது
நீ காதலிக்கிறாயா? என்று
ஆம் என்றேன் – வியந்துபோனது!
ஆம் நான் காதலித்துது பெண்ணை அல்ல
கவிதையாகிய உன்னை.

ச.அன்புச்செல்வம்
இளம் விலங்கியல் [ முதல் ]

## இழப்பும் சிறப்பே!

அம்மாவின் கருவரை இழந்தேன் பிறப்புக்காக
அப்பாவின் அன்பை இழந்தேன் படிப்புக்காக
படிப்பின் அறிவை இழந்தேன் உறவுக்காக
உறவின் பாசத்தை இழந்தேன் நட்புக்காக
நட்பின் அன்பை இழந்தேன் இளந்தூதுவிற்க்காக...
இப்படி நான் இழந்ததை விட இன்று எனக்கு
கிடைத்த உறவும், அறிவுமே மிக பெரிதாக உள்ளது

கு.தரணி
இளம் கணினி அறிவியல் [ முதல் ]






## நீரின்றி அமையாது உலகு



## மழைநீர் சேகரிப்பு

பி.பிரவின்
இளம் கணிதம் [ முதல் ]

# இளப்பு இழப்பிற்கு




ச.ஷியாம்பிரசாத்
இளம் கணிதம் ( முதல் )





## காலம்

பள்ளிக்காலம் என்பது பருவக்காலம்!
கல்லூரிக்காலம் என்பது கலைக்காலம்!
வேலைக்காலம் என்பது வேதனைக்காலம்!
கல்யாணக்காலம் என்பது கனாக்காலம்!

ச.சிவானந்தன்
இளம் கணிதம் ( முதல் )

## கைபேசியின் கைப்பிடியில்

காலையில் கண் விழித்ததும் பல்துலக்கியை
தேடிய கைகள்
அலை பேசியை தேடி அலைகிறது...
புத்தக நூலை எடுத்த காலம் போய்
முகநூலில் மூழ்கி இருக்கின்றனர்.
ஓடி ஆடி விளையாடிய காலம் போய்
அலைபேசியில் விளையாடும் காலம் இது!
காலையில் உடற்பயிற்சி செய்யாமல்
தொலைக்காட்சியில் உடற்பயிற்சியை காணும்
காலமும் இதுவே!
இது நமக்கு முன்னேற்றமா? இல்லையா?

வெ.ஆதிராஜ்
இளம் கணிதம் ( முதல் )

## மின்னலே...

நான் போட்ட அழகிய கோலம்
அலையகூடாதென்று
மழை வருவதற்கு முன்பே
இடி படம் பிடிக்கிறது.

## சிதறும் பார்வை

தாத்தா சொன்ன கருத்துகள் அழிந்தன
பாட்டி சொன்ன கதைகள் மறந்தன
அப்பா வாங்கி தந்த பொருட்கள்
துலைந்தன
அம்மா காட்டிய பாசம் குறைந்தது
ஆனால் நீ பார்த்த பார்வை மட்டும்

எம்.காயத்ரி
இளம் இயற்பியல் (முதல்)





## காலத்தைக் கடந்து பயணித்தல்

"காலம்" - எவர் கட்டுப்பாட்டிற்கும் அடிபணியாமல் இருக்கும் தன்மையது. அதன் கட்டுப்பாட்டில் தான் இவ்வுலகம் இயங்குகிறது. அத்தகைய காலத்தால் பாதிக்கப்படாதவர் இவ்வுலகில் இல்லை. இவ்வுலகில் இவ்வாறு பாதிக்கப்பட்டோர் முதலில் சிந்தித்தது "இந்த அறிவு சிறுகணம் முன்னால் வந்திருக்க கூடாதா? இல்லை சற்று காலம் பின்னோக்கி சென்று நமது தவற்றை சரி செய்ய இயலாதா?..." என்று எண்ணுபவரின் அறிவில் இருந்து தான் காலத்தினை கடக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. அவ்வாறு காலத்தினை கடக்க இயலுமா?... கடக்கும் கோட்பாடுதான் என்ன?... அவ்வாறு கடந்த காலத்தையோ, வருங்காலத்தையோ மாற்றினால் என்ன நேரும்...? இவ்வனைத்து கேள்விகளுக்குரிய அடிப்படை கருத்துகளையும், பதில்களையும் காண்போம்.

முதலில் காலத்தை கடக்க இயலுமா... இதற்கான பதில் இயலும். ஆனால் சில இல்லை பல தடைகள் உண்டு. நாம் வாழும் இருபத்து ஒராம் நூற்றாண்டில் இதற்கான கருவிகள் இல்லை. ஒரு வேளை வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம்.

அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் கூட அறிவியல் கோட்பாட்டின்படி வருங்காலத்திற்கு செல்லலாம். ஆனால் திரும்பி வர இயலாது. பின்னர் வருவதற்கென கண்டுபிடிப்புகள் வரலாம் வராமலும் போகலாம். ஆனால் இறந்த காலத்திற்கு செல்வது என்பது இயலாத ஒன்றாகவே தோன்றுகிறது. சொல்ல முடியாது அதற்கான கருவிகள் கூட வரலாம், வராமலும் போகலாம். முடிவாக கூறுவது காலத்தை கடக்க இயலும்.

அறிவியலாளர்கள் கண்டறிந்த கோட்பாடு பற்றி கூற வேண்டுமென்றால் இரு வழிகள் உண்டு. இரண்டுமே ஒன்றை ஒன்று சார்ந்தது. முதலில் ஐன்ஸ்டின் கூறுவது "ஒளியின் வேகத்தை விட விண்ணில் அதிகமான வேகத்துடன் பயணித்தால் அதன் விளைவாக பூமியில் இருக்கும் நேரத்தைக் காட்டிலும் விண்ணில் சற்று குறைவான நேரமே ஆகும்". இதை நிரூபிக்கும் வகையில் நடந்த ஒரு சோதனைப் பற்றி காண்போம்.

"சீஸியம் - அணு கடிகாரம்" - இது மிகவும் துள்ளியமான ஒன்றாகும். இதில் குறைபாடு என்பது ஏற்பட பல நூறு ஆண்டுகள் ஆகும். அதுபோல இரண்டு கடிகாரத்தைக் கொண்டு இந்த சோதனை நடைபெற்றது. ஒரு கடிகாரம் பூமியிலும் மற்றொன்று ஒரு விண்கலத்திலும் வைக்கப்பட்டு இருந்தது. விண்கலம் பூமியை இரு முறை சுற்றி வருமாறு செய்யப்பட்டது. வந்தபின் அந்த சோதனையின் முடிவு வெளியாகியது.

விண்களத்தில் இருந்த கடிகாரம் குறைவான நேரத்தைக் காட்டியது. ஒரே நேரத்தைக் கொண்டே செயல்பட இரு கடிகாரம் வெவ்வேறு நேரத்தை காட்டியது காலத்தை கடக்க முடியும் என்று நிரூபித்து காட்டியது.

ஆனால் இரண்டாம் கோட்பாட்டிற்கு என ஒன்று உள்ளது. அது சூரியனைக் காட்டிலும் பெரிய நட்சத்திரம் ஒன்று தனது ஆயுட்காலம் முடிந்தவுடன் வெடித்து திரும்ப உள்வாங்கும். தனது மொத்த நிறையையும் ஒரு சிறிய தேங்காய் அளவிற்கு கொண்டு வரும். சிந்தித்து பாருங்கள். சூரியனைக்க காட்டிலும் பெரிய நட்சத்திரம் தனது மொத்த நிரையையும் ஒரு தேங்காய் அளவிற்கு கொண்டு வரும் போது அதன் ஈர்ப்பு விசையானது பல மடங்கு அதிகரித்து இருக்கும். நாம் ஒரு பொருள் மீது ஒளியை செலுத்தினால், அந்த ஒளி அப்பொருள் மீது பட்டு பின்னர் பிரதிபலித்து நம் கண்களை வந்து அடைகிறது. ஆனால் அக்கருத்துதுக்களை அண்டத்தில் எங்கு இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பது கடினம். அதனுள் சென்றுவிட்டால் தப்பிப்பதற்கு வாய்புகள் இல்லை. காரணம் அதன் அடர்த்தி எண்ணமுடியா அளவை தொட்டுவிடும்.

அவ்வாறு அதன் உள்ளே சென்று வெளிவர ஒளியைக்காட்டிலும் அதிக வேகம் தேவைப்படும். அக்கருத்துக்களை உள் நேரம் என்ற ஒன்று செயலற்று போகும் தன்மையுடையது. அதே நேரத்தில் பூமியில் நேரம் பல மடங்கு வேகமாக இருக்கும். உதாரணமாக ஒரு மனிதன் கருத்துளையின் உள் சென்று திரும்பி பூமியை வந்தடைந்தால் அவன் வயது தனது கொள்ளுப் பேரனின் வயதைவிட குறைவாக இருக்கும். (இது ஒரு கற்பனையான உதாரணம்தான்). ஆனால் நம் அண்டத்தின் அருகே உள்ள கருத்துளையை அடைய தற்போதைய கருவியைக்கொண்டு சென்றால் ஏறக்குறைய 86,000 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். அக்கருத்துளையை அடைவது கூட கடினமான ஒன்று தான். இதுவே காலத்தை கடக்கும் கோட்பாடு.

அவ்வாறு பார்த்தால் கடந்த காலத்திற்கு காலப்பயணம் செய்வது இயலாத ஒன்று. ஒரு வேளை கடந்த காலத்திற்கு சென்று , ஒரு சிறு கல்லை இடம் மாற்றி வைத்தால் கூட பெரும் தாக்கத்தை ஏற்ப்படுத்தவல்லது. ஆகவே இக்கட்டுரையில் காலத்தை கடப்பதைப் பற்றிய அடிப்படை தான் கூறியிருக்கின்றேன். மேலும் சில கருத்துக்கள் புரிய வேண்டும் என்பதற்காக எளிமையாக கூறப்பட்டுள்ளது. காலத்தைக் கடக்கும் அடிப்படை அறிவை புகுத்தி இருப்பேன் என்ற எண்ணத்தோடு கட்டுரையை முடிக்கிறேன். தற்போதைய வாழ்வில், "எதிற்காலத்தை பார்க்க முடியாது இறந்த காலத்தை மாற்றமுடியாது நிகழ்காலத்தை மகிழ்ச்சியாக வாழ்வோம்".

ஆசிரியர் குழு





## தனியார் பள்ளி

வீணையை கையில் ஏந்தி
நம் விதிகளை தீர்மானித்து
காகிதத்தை கருவியாக கொண்டு
எழுதுகோலை ஆயுதமாக ஏந்தி
கண்களால் காவியம் எழுதும்
கலைமகளே அங்கு வந்தாலும்
தன் மகளை கான்வெண்டில் சேர்க்க
வீணையை விற்றே ஆக வேண்டும்.

மு.வெங்கடேஷ்பிரபு
இளம் இயற்பியல் ( முதல் )

## போலி விளையாட்டு

கண்களில் கலந்த காட்சி
விரல்களில் நுணியில் விளையாட்டு
செவ்வகத்தில் அடங்கிய போட்டி
உண்ணும் மறுகையில் கண்கள்
மனம் தேடித் துடிக்கும் வெற்றி
தினமும் இரவின் மடியில்
கடக்கின்றன இரு கைகளின் பிடியில்

மு.அருண் பிரசாத்
இளம் கட்புலம் ( இடை )

# அனைவரின் அன்னை



மு.முரளிதரன்
இளம் இயற்பியல் ( முதல் )





# முயற்சி

முடியாது என்று விழுந்து விட்டால்

– சிலந்தி கூட வலைவிரிக்கும்

முடியும் என்று எழுந்து விட்டால் எரிமலை கூட

– வழி கொடுக்கும்

முடியாது என்று நினைத்து விட்டால் மூச்சுக்காற்றும்

– நின்று விடும்

முடியும் என்று நினைத்து விட்டால் மூளைக்குள்

– மின்சாரம் பாயும்

தன்னம்பிக்கை என்னும் நெருப்பு பொறியை மனித மனம்

– தாங்கி நின்றால்

எண்ணியது எண்ணியவாறு நடைபெறும் இடையூறுகள்

– எரிந்து சாம்பலாகும்...

கு.ஷர்மிளா
இளம் ஆங்கிலம் [ முதல் ]








## மல(ர)டி பெண்ணே...

அவளுக்கு வயது ஒன்று இருக்கும்
அறிந்திருப்பேனோ அவளை
முன்னொரு பிறவியில்
மாலையும் மதியமும்
கலந்தொரு பொழுது
சிட்டுக்குருவிகள்
சிறகடிக்கும் ஓசை
எங்கோ புலம்பும்
வாகனங்கள் இரைச்சல்
காற்றுக்கு தலையசைக்கும்
மரங்களின் பேச்சு
பிஞ்சு கால்களோடு
சங்கீதம் பாடும் சருகுகள்
நாளை பாடகராய் தயாரிப்பாளராய்
மாறப்போகும் கலைஞர்களின்
இன்றைய குழந்தைக் குரல்
அனைத்திற்கும் மத்தியில்
என் காதில் விழும்
அவளது அழுகை



Scanned with OKEN Scanner

எதையோ தேடிச் சுற்றும்
தேனிக்கு
மலரின் ஆதரவைப் போல்
எனக்கு அவள்...
சாதிக்காத என் கரங்களுக்கு
அவள் தான் சிறந்த பட்டம்...
இந்த மலடி பெண்ணுக்கு
அழுகைக்கு நடுவில்
அவள் வைத்த பெயர்
"அம்மா"...
ஆணி அடித்த இதயத்தை
வைத்தியம் பார்த்து
இன்பத்தை விதைத்த அவளுக்கு
இவ்வுலகம் வைத்த பெயர்
"அனாதை"
அவளை என் நெஞ்சில் சுமக்கவே
அனாதை இல்லம் தன்னில் சுமந்ததோ?
தாயாக மாறுகிறேன்
மலரடி பெண்ணே
என் மகளாய்...

ஆர்.இராஜலெட்சுமி
இளம் கணிதம் ( இடை )





# ஹைக்கூ

## தமிழன்

தமிழனை பழிவாங்க உலகமே
வந்தாலும்
உலகமே பழிவாங்கி நின்றாலும்
பழிவாங்காமல் பாசத்தோடு கைகொடுப்பான்
தமிழன் !

## கவிஞன்

கவிஞனின் வலிகள்
கவிதையின் கடைசி
வரிகளில்

## ஓசை

உன் ஓசையை கேட்க பூமியே ஒரு நிமிடம்
அசையாமல் நிற்கிறது
நீ வயலின் வரப்பில் ஓடுகையில் உன்
பாத கொலுசு ஒலியை கேட்க...

## அன்பு

ஒரு தாய் தன் பிள்ளைக்கு
சோறு ஊட்டுவது அன்பு !
ஒரு அக்கா தன் தங்கைக்கோ, தம்பிக்கோ
சோறு ஊட்டுவது பேரன்பு !

ஆசிரியர் குழு

## வாசகனின் வாசகங்கள்

### சாலை பாதுகாப்பு

போற்றுவோம் சாலைவிதியை

மாற்றுவோம் தலைவிதியை

வளைவில் வேகம்

விளைவில் மரணம்

### இளந்தூது

சாதிக்க வழிஏது

சந்திக்க இளந்தூது

### தமிழ்மொழி

எப்பொழுதும் செல்வோம் அறவழியில்

எந்நாளும் சொல்வோம் தமிழ்மொழியில்

### பெண்ணியம்


கண்ணிமைத்து கண்களை காப்போம்

கண்ணிமைக்காமல் பெண்களைக் காப்போம்

உ.கலையரசு
இளம் கணிதம் [ முதல் ]



ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்




# நம் வாழ்வின் ஒரு அங்கமாக நாள் காட்டி

நம்மில் பலருக்கும் நாள் காட்டியில்
தேதி கிழிக்கும் பழக்கம் இருக்கும்
நாம் ஒவ்வொரு நாளும் தேதி
கிழிக்கும் போது இந்த வருடத்தில்
ஒரு நாள் முடிந்தது அல்லது இந்த
மாதத்தில் ஒரு நாள் முடிந்தது அல்லது
நாம் ஒரு தேதியை எதிர்பார்த்து காத்திருப்போம்
அந்த தேதி வருடத்திற்கு எத்தனை நாட்கள்
உள்ளது என நினைத்து தேதி
கிழிக்கின்றோமே தவிர.
நம்மில் எத்தனை பேர் நம் வாழ்நாளில்
ஒருநாள் முடிந்தது என நினைக்கிறோம்.
அப்படியே இருந்தாலும் முடிந்த
அந்த நாளில் நாம் என்ன சாதித்தோம்!
எந்த ஒரு சாதனையும் ஒரே நாளில்
வருவது அல்ல. ஆனால் நாம் ஒவ்வொரு
நாளும் முயற்சி செய்தால் ஒருநாள் அது
பெரும் சாதனையாக அமையும்.
அந்த தேதியை நாம் நம் வாழ்நாளில்
மறக்க முடியாது..!

சி.மணிகண்டன்








LIC பிரிமியம் செலுத்துமிடம்

**சுவாமி மளிகை**

12C/5, காந்திஜி ரோடு, கூறைநாடு, மயிலாடுதுறை 609 001
பிரிமியம் செலுத்தும் நேரம் : காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை
ஞாயிறு மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

முகவர் :
K.முத்துக்குமரசாமி
DM Club Member
செல் : 9443526249

# வாய்ப்புகளை உருவாக்கு

ஒரேத் தெருவில் இருக்கின்ற ஒரு பையனுக்கு அப்பா, அம்மா இல்லை. அதேப் போல் அதேத் தெருவில் இருக்கும் 2 நபருக்கு குழந்தை இல்லை. அவர்களுக்கு குழந்தை இல்லை என்பதற்காக அங்கு இருக்கும்குழந்தைகளை பாசமாக பார்ப்பார்கள். அதனால் அந்தப் பையனுக்கு அவர்களை மிகவும் பிடிக்கும். அதனால் அவன் அவர்களுடன் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் வரும் போதெல்லாம் அவர்கள் தெறியும் படியாக ஒரு கடைக்குச் சென்று அங்கு அவர் தான் என்னுடைய அப்பா அவர் என்னை ரொட்டி வாங்கிக் கொள்ள சொன்னார் என்று வாங்கிக் கொண்டு சென்று சாப்பிடுவான். அதேப் போல் மறுநாளும் அவன் செய்தான். அதை அவர் பார்த்துக் கொண்டு இருந்தார். பிறகு மறுநாள் அவர் அவனுடைய கையைப் பிடித்து அழைத்து "உனக்கு என்ன வேண்டும் எதற்காக என்னை உன் அப்பா என்று அழைக்கிறாய்? உன் அப்பா எங்கே?" எனக் கேட்டார். அதற்கு அவன் எனக்கு அப்பா, அம்மா இல்லை.நான் ஒரு அனாதை. நீங்களும் அம்மாவும் காட்டுகிறப் பாசத்தை பாத்திருக்கிறேன். உங்களிடம் தயவு செய்து கேட்கிறேன். என்னை உங்கள் மகனாக வளர்க்கிறீர்களா? என்று கேட்டான். பிறகு அவர் யோசித்துப் பார்க்கிறார். "நான் இந்தப் பையனைப் பார்க்க வேண்டும், இவனை வளர்க்க வேண்டும் என்று எவ்வளவு வாய்ப்புகளை உருவாக்கி இருக்கிறான்" என்று யோசித்தார். பிறகு அவனை தன்னுடைய வீட்டிற்கு தன்னுடைய மகனாக அழைத்துச் சென்றார்.

"கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்துவது மட்டும் அறிவு இல்லை, வாய்ப்புகளை உருவாக்குவதும் சிறந்த அறிவு தான்"...

ஆசிரியர் குழு





# அகரம்

அன்பை தருவது நட்பு!

ஆனந்தம் தருவது குடும்பம்!!!

இன்பம் தருவது காதல்!

ஈகை தருவது எண்ணம்!

உணவு தருவது விவசாயம்!

ஊக்கம் தருவது ஆசை!

எழுத்து தருவது பதில்!

ஏக்கம் தருவது நிறைவு!

ஐய்யம் தருவது தைரியம்!

ஒழுக்கம் தருவது கல்வி!

ஓவியம் தருவது வரலாறு!

ஔக்கம் தருவது ஆக்கம்!

எஃகு தருவது வீரம்

அ.நித்திஷ் பிராங்கிளின்
இளம் கணினி பயன்பாட்டியல் ( முதல் )



Scanned with OKEN Scanner

# கம்பன் தரும் பட்டங்கள்

சொல்லின் செல்வன் – அனுமன்

தள்ளரிய பெருநீதியோன் – பரதன்

சிநியன சிந்தியாதான் – வாலி

இடைபேரா இளையோன் – கும்பகர்ணன்

தீராக்காதலன் – குகன்

மூரிய தேவர்வலன் – சுமந்திரன்

தன் தனி உயிர்த் தந்தை – சடாயு

கதிரோன் மைந்தன் – சுக்ரீவன்

பொய்யுரையாப் புண்ணியன் – வாலி

மறனி முக்கா மனமுடையான் – அதிகாயன்

பழி வளர்க்கும் செல்வி கைகேயி

படரெல்லாம் படைத்தவள்

நாய் அடியேன் – குகன்

தாயினும் நல்லான்

யாதினும் இனிய நண்பன் – குகன்

தனி சுமித்; திரைச்சிங்கம் – இலக்குவன்

ஆசிரியர் குழு





# விருதி வாழ்க்கை

அன்பு என்ற நட்பில் ஒன்று சேர்ந்து

ஆனந்தமாய் ஆண்டுகளை கழித்து

இன்பமாய் நாட்களை தொலைத்து

ஈசலை போல் பறந்து திறிந்து

உயிருடன் ஒன்று சேர்த்து

ஊஞ்சலைப்போல் நம் வாழ்க்கையை விடுதியில் கழித்து

எவரும் கண்டிடாத வாழ்க்கையை வாழ்ந்து

ஏவலாய் அந்த நாட்களை மீண்டும் எதிர்பார்த்து

ஐயம் இன்றி திரியும் நம் நட்பு

ஒழுக்கம் மட்டும் அல்ல அன்பும் பணிவும் கொண்டு

ஓங்கி வாழ்ந்து நட்பில் பிரிவு என்பதை தடுத்து

ஔவை சொல்லும் வார்த்தைக்கு அடையாளமாய் திகழ்ந்து

ஃ என்ற முப்புள்ளியில் இணைந்து என்றும்

இதைப்போல் நம் நட்பு அணைத்திலும்

சமமாக இருக்க வேண்டும்

அ.அபிநயா
இளம் கணினி பயன்பாட்டியல் ( இடை )



Scanned with OKEN Scanner

# இளந்தூது

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் **இரா.மஞ்சுளா** அவர்கள்

## 30 ஆம் ஆண்டு ஆசிரியர் குழு

ஆசிரியர் : **மு.சௌந்தர்யா,** இளம் கணிதவியல் (நிறை)

இணை ஆசிரியர் : **அ.முகமது சாதுல்,** இளம் வணிகவியல் (நிறை)
**இரா.மதிவதனி,** இளம் கணிதவியல் (நிறை)

வரை கலைஞர் : **சுகிபிரபாகரன் சுப்புராஜி,** இளம் கட்புலம் (இடை)

சிறப்பு ஆலோசகர் : **இர.புவனேஸ்வரி,** முதுகலை ஆங்கிலம் ( நிறை)

உறுப்பினர்கள் : **வி.விக்னேஷ்வரன்,** இளம் ஆங்கிலம் ( இடை)
**மு.அருண்பிரசாத்,** இளம் கட்புலம் ( இடை)
**க.யோகேஸ்வரி,** இளம் கணிதவியல் ( இடை)
**கு.ஷாலினி,** இளம் உயிரி தொழில்நுட்பவியல் ( இடை)
**சி.சத்யா,** இளம் வரலாறு (இடை)

---

ஆசிரியர், இளந்தூது,
மாணவர் இதழ் (தமிழ்த்துறை),
ஏ.வி.சி.கல்லூரி (தன்னாட்சி)
மன்னம்பந்தல்,
மயிலாடுதுறை - 609 305.

உங்கள் படைப்புகள், விமர்சனங்கள்
உள்ளிட்டவற்றை இளந்தூது மின்னஞ்சல்
ilanthoodhu30@gmail com.com
ilanthoodthu Editonal Board
மூலம் அனுப்பவும்

---

அச்சாக்கம்....
**தினேஷ் டிஜிட்டல் பிரிண்டர்ஸ்**
மறையூர், மயிலாடுதுறை செல் : 8973438387 / 9952568387



30 ஆம் ஆண்டு ஆசிரியர் குழு

